உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

சுடர் : 41
கதிர் : 209

செவ்வாய்க்கிழமை
23 ஜூன் 2026

ஆனி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## பயங்கரவாதத் தடைச்சட்டம் மிக விரைவில் நீக்கப்படும்!

### ஜனாதிபதி அநுர உறுதி

கொழும்பு, ஜூன் 23
பயங்கரவாதத் தடைச்சட்டம் மிக விரைவில் நீக்கப்படும். அந்தச் சட்டத்துக்குப் பதிலாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங் களைத் தடுப்பதற்கான புதிய சட்டமொன்று அறிமுகப் »11



வலி.வடக்கில்

# இராணுவ ஆக்கிரமிப்பு மேலும் விரிவாக்கம்!

### ஒன்றிணைந்த பண்ணையும் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23
மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் என்று அரசாங் கம் கூறுகின்ற போதிலும், வலி.வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு மேலும் விரிவடைந்துள்ளது என்றும், தற்போது இராணுவத்தால் ஒருங் கிணைந்த பண்ணையொன்று அமைக்கப்பட்டுள்ளது எனவும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். »11

8 மாதங்களின் பின்னர் இடம்பெற்ற அமர்வு;

## வவுனியா மாநகரசபையில் நேற்றுப் பெரும் குழப்பம்!

### முதல்வருக்குக் கடும் எதிர்ப்பு

வவுனியா, ஜூன் 23
வவுனியா மாநகரசபை கடந்த எட்டு மாதங்களாக முடங்கியிருந்த நிலை யில், நீண்ட இடைவெளிக் குப் பின்னர் இடம்பெற்ற நேற்றைய அமர்வில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுகள் காரணமாக வவு னியா மாநகர சபை கடந்த »11

பாடசாலைகளுக்கு இடையிலான

## வடமாகாணத் தடகளம் யாழில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
வடக்கு மாகாணப் பாட சாலைகளுக்கு இடையி லான மாகாணமட்டத் தட களப் போட்டிகள் யாழ்ப்பா ணம் துரையப்பா விளை யாட்டு மைதானத்தில் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகனால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட் டுள்ளது.
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகா ணக் கல்விப் »11

அரசியல் ஆதாயத்துக்காக

## தாக்குதல் நடத்தும் அவசியம் கோத்தாபயவுக்கு இல்லையாம்

### கம்மன்பில மீண்டும் கதறல்

கொழும்பு, ஜூன் 23
தாக்குதல் நடத்தி ஆட்சி யைப் பிடிக்கவேண்டும் என்ற அவசியம் கோத்தா பய ராஜபக்சவுக்கு இல்லை என பிவிருது ஹெல உறு மயவின் தலைவரும், முன்னாள் அமைச்சரு மான உதய கம்மன்பில »11

## ராஜபக்சக்கள் மீது பழிவாங்கல் உச்சம்

### கவலையில் மஹிந்த



கொழும்பு, ஜூன் 23
ஜனாதிபதி அநுர தலைமையி லான தேசிய மக்கள் சக்தி அர சாங்கத்தால் ராஜபக் சக்கள் அனைவரும் »11

பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து


## பெண் குழந்தை பரிதாபச் சாவு!

### கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, ஜூன் 23
கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து பெண் குழந்தையொன்று நேற்றுப் பரிதாபமாக உயிரிழந்தது. »11

செம்மணிப் புதைகுழியிலிருந்து

## 13 என்புத் தொகுதிகள் நேற்றும் அகழ்ந்தெடுப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 23
செம்மணி மனிதப்புதைகுழி யில் இருந்து நேற்றும் 13 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அத்து டன் மேலும் 7 என்புத் தொகு திகள் அடையாளம் காணப் பட்டுள்ளன. செம்மணி புதை »11



"சண்டையில நாட்டம் போய் உவைக்கு இப்ப பண்ணையில தோட்டம் செய்யிறதே முழுநேர வேலையாப் போச்சு கண்டியளோ"

## வழக்கம்பரையில் கத்திவெட்டு குடும்பத்தலைவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வழக்கம் பரை பகுதியில் இடம் பெற்ற கத்திவெட்டுத் தாக் குதலில் ஒருவர் படுகாயம் அடைந்தார். சம்பவம் தொடர் பில் மேலும் தெரியவருவ தாவது:-
அயல்வீடுகளைச் சேர்ந்த இரு தரப்பின ருக்கு இடையி »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி 22.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4468
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 07 26 45 67
விசேட எழுத்து J

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 22.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1535
வெற்றி இலக்கினம் தனுஷம்
வெற்றி இலக்கங்கள் 25 37 45 58

**NLB ஜய**
திகதி 22.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0494
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 6 9 2 1

**மெகா பவர்**
திகதி 22.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2574
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 03 13 51 64

**மஹஜன சம்பத**
திகதி 22.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6226
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 9 8 5 7 2 4

**தன நிதானய**
திகதி 22.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2256
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 07 22 37 52
விசேட எழுத்து A

**சுப தவசக்**
திகதி 22.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0342
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 32 33 40

# அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள ஐ.நா. சித்திரவதைத் தடுப்புக்குழு

கொழும்பு, ஜூன் 23

**இலங்கையில் ஒன்பது நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் சித்திரவதைத் தடுப்புக்கான உபகுழு, தனது கள ஆய்வுகளை நாளை நிறைவு செய்யவுள்ளது.**

கடந்த 15ஆம் திகதி முதல் இலங்கையில் தங்கியிருந்த நான்கு உறுப்பினர்களைக் கொண்ட இக்குழு, நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு திடீர் பயணங்களை மேற்கொண்டு கைதிகளின் நிலைமைகளை நேரடியாக ஆய்வு செய்தது. 2019ஆம் ஆண்டுக்குப்பின், சித்திரவதைத் தடுப்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதே இக்குழுவின் முக்கியமான நோக்கமாகும்.

இதன் ஒரு பகுதியாக, வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மற்றும் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய அரசாங்கத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் குறித்து இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

சித்திரவதைக்கு எதிரான மாநாட்டின் விருப்பத்துக்குரிய நெறிமுறையின்படி, இக்குழு தனது கள ஆய்வின் அடிப்படையிலான இரகசிய முதற்கட்ட அவதானிப்பு அறிக்கையை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளது. தொடர்ந்து, இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு கையளிக்கப்படும். இலங்கை அதிகாரிகள் கோரினால் ஒழிய, இவ்வறிக்கைகள் இரகசியமாகவே பேணப்படும் என்பது குறிப்பிடத் தக்கது. 2019ஆம் ஆண்டு பயணத்தின் அறிக்கையும் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக் கது. (எ-இ)

## போதைப்பொருளுடன் கைதான மாணவன் தகுதி நீக்கம்

பேராதனைப் பல்கலைக்கழக விடுதியில் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்ட மூன்றாம் ஆண்டு மாணவர் ஒருவரை, பல்கலைக்கழக நிர்வாகத்தால் மாணவர் தகுதியிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலைப்பீடத்தைச் சேர்ந்த குறித்த மாணவர் விடுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகக் கிடைத்த தகவலையடுத்து, ஒழுங்கு நடவடிக்கைப் பிரிவு மேற்கொண்ட சோதனையில் போதைப்பொருள்கள், டிஜிற்றல் தராசு மற்றும் 75,000 ரூபாய் ரொக்கப் பணம் என்பன கைப்பற்றப்பட்டன. இச்சம்பவம் குறித்து பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், துணைவேந்தர் பேராசிரியர் தெரன்ஸ் மதுஜித்தின் பரிந்துரையின் பேரில், சம்பந்தப்பட்ட மாணவரின் மாணவர் தகுதியை இரத்து செய்ய நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இதுதொடர்பான அறிவித்தல் கடிதம் மாணவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## புதிய பஸ்கட்டணத்திருத்தம் அடுத்த மாதம் நடைமுறை?

கொழும்பு, ஜூன் 23

ஆண்டுதோறும் ஜூலை முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம், இந்த ஆண்டு ஜூலை 3ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படலாம் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைத் திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டண மாற்றம் குறித்த கலந்துரையாடல்கள், ஏனைய பேருந்துச் சங்கங்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய டீசல் விலை உயர்வால் தனியார் பேருந்து உரிமையாளர்கள் கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வருவதாகவும், இதன் காரணமாக ஜூன் மாத ஆரம்பத்தில் இருந்து இதுவரை சுமார் 60 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். எதிர்காலத்தில் டீசல் விலை குறைக்கப்பட்டாலும், அடுத்த ஆறு மாதங்களுக்கு பேருந்துக் கட்டணங்களைக் குறைக்கப் போவதில்லை என அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

கட்டண திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனான ஆலோசனைகளுக்குப் பின்னரே உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 22.06.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0934
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 2 3 6 2 5 8

**Super Ball**
திகதி 22.06.2026 தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3200
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கம் 15 27 28 61

**சனிதா**
திகதி 22.06.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கம் 25 28 40 77
வெற்றி வாரம் 5361

**SASIRI**
திகதி 22.06.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 1030
வெற்றி இலக்கம் 27 31 42

**லக்ன ராசி**
திகதி 22.06.2026 தினம் திங்கட்கிழமை
விருச்சிகம்
வெற்றி இலக்கம் 15 55 59 61
சீட்டிழுப்பு வாரம் 4912

**KAPRUKA**
திகதி 22.06.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 39
வெற்றி இலக்கம் 27 49 55 73
வெற்றி வாரம் 2376

**அத கோடிபதி**
திகதி 22.06.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 22 34 61 76
வெற்றி வாரம் 3026

## தனுஷ்கோடியில் சோதனை நிறுத்தம் கடத்தல்கள் அதிகரிக்கும் சாத்தியம்!

இராமேஸ்வரம், ஜூன் 23

தனுஷ்கோடி பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடிகள் கைவிடப்பட்டுள்ளதால், இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான கடத்தல்கள் மற்றும் சட்டவிரோத ஊடுருவல்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் தனுஷ்கோடியில் இருந்து இலங்கையின் தலைமன்னார் வரையிலான தூரம் சுமார் 38 கி.மீ. மட்டுமே. இதில், தனுஷ்கோடியில் இருந்து 11 கி.மீ. தொலைவிலுள்ள 6ஆம் மணல் திட்டையுடன் இந்திய எல்லை முடிவடைகிறது. இந்தக் குறுகிய கடல் எல்லை வழியே கடத்தல்காரர்கள் தடையின்றி ஊடுருவ வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்படுகிறது.

முன்பு பாம்பன் பாலம், தனுஷ்கோடி முகுந்தராயர் சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் 24 மணி நேரக் கண்காணிப்பு சோதனைச் சாவடிகள் இயங்கி வந்தன. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகளாகக் காவல்துறை அதிகாரிகள் போதிய அளவில் பணியமர்த்தப்படாததால், இக்கண்காணிப்புப் பணிகள் முழுமையாக முடங்கியுள்ளன.

தனுஷ்கோடியில் இருந்த காவல்துறை ஓய்வறைகளும் தற்போது சிதிலமடைந்து கிடக்கின்றன. எனவே, தேசியப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, தமிழக அரசு உடனடியாகச் சோதனைச் சாவடிகளில் காவல்துறையினரைப் பணியமர்த்தி, கடலோரப் பாதுகாப்பை மீண்டும் பலப்படுத்த வேண்டுமென ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ-இ)

# போலிப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்; பொதுமக்களுக்கு சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன் 23

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, வீடுகள் மற்றும் நிறுவனங்களிடம் பணம் பறிக்கும் மோசடிக் கும்பல் ஒன்று செயற்பட்டு வருவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்புப் பரிசோதனைகளை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் இந்த மோசடிக்காரர்கள், சட்ட நடவடிக்கை எடுப்பதாக அச்சுறுத்தி பொதுமக்களிடம் பணம் கோரி வருகின்றனர். இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சங்கத்தின் பதில் தலைவர் உபுல் ரோஹண, "பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எவ்விதக் காரணத்திற்காகவும் பொதுமக்களிடம் கட்டணம் வசூலிப்பதோ அல்லது பணத்தைப் பெறுவதோ இல்லை" எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இத்தகைய போலி நபர்களிடம் பொதுமக்கள் ஏமாறவேண்டாம் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இவ்வாறான நபர்கள் எவரேனும் பணத்தைக் கோரினால், அவர்களுக்குப் பணம் வழங்குவதைத் தவிர்த்துவிட்டு, உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்திற்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ தகவல் வழங்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாதியர் பற்றாக்குறையால் கட்டமைப்பு வீழ்ச்சியடையும்

## ஐக்கிய தாதியர் சேவைச் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 23

**நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் சுமார் 23,000 தாதியர்கள் மற்றும் 14,000 கனிஷ்ட பணியாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக ஐக்கிய தாதியர் சேவைச் சங்கம் எச்சரித்துள்ளது.**

கொழும்பில்நடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சங்கத்தின்தலைவர்தென்னே ஞானானந்த தேரர், இந்த வெற்றிடங்களை நிரப்ப தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டது என்று குற்றம் சாட்டினார். பணியாளர் பற்றாக்குறையால் இருவர் செய்ய வேண்டிய வேலையை ஒருவர் மட்டுமே செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. தாதியர்கள் பல நாள்கள் தொடர்ச்சியாகப் பணியாற்ற வேண்டியுள்ளதால் கடுமையான வேலைப்பளு உருவாகியுள்ளது. உடனடியாகக் குறுகிய, இடைக்கால மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்படாவிட்டால், ஒட்டுமொத்த மருத்துவமனைக் கட்டமைப்பும் முற்றாக வீழ்ச்சியடையும் என்று அவர் எச்சரித்துள்ளார். சங்கத்தின் செயலாளர் நிசான் சலா பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், தாங்க முடியாத மன அழுத்தம் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகத்தாதியர்கள்தொழிலை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்வது சடுதியாக அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். நிலைமை மேலும் மோசமடைவதற்கு முன் அரசாங்கம் இதில் உடனடியாகத் தலையிட்டு தகுந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (எ-இ)

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 23
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்றுச் சிறியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாளாந்த நாணயமாற்று விகிதங்கள் தெரிவிக்கின்றன. மத்திய வங்கியின் இன்றைய உத்தியோகபூர்வத் தரவுகளின்படி டொலரின் கொள்முதல் பெறுமதி 329.30 ரூபாவாகவும், விற்பனைப்பெறுமதி339.06 ரூபாவாகவும் காணப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல்பெறுமதி328.85 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 338.70 ரூபாவாகவும் காணப்பட்டது. (எ-இ)

## சுற்றுலாத்துறை வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 23
நடப்பு ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், வெளிநாட்டுப் பணவனுப்பல் கணிசமான வளர்ச்சி கண்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மத்திய வங்கியின் புதிய அறிக்கையின்படி, இந்த ஆண்டின் ஜனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் சுற்றுலாத்துறை மூலம் 1,360 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது. 2025ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஈட்டப்பட்ட 1,543.1 மில்லியன் டொலருடன் ஒப்பிடுகையில், இது 11.9 சதவீத வீழ்ச்சியாகும். மே மாத வருமானமும் கடந்த ஆண்டின் 164.1 மில்லியன் டொலரிலிருந்து, இவ்வருடம் 155.7 மில்லியன் டொலராகக் குறைவடைந்துள்ளது. இருப்பினும், இக்காலப்பகுதியில் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணவனுப்பல் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. ஜனவரி முதல் மே வரை 3,909.7 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்குக் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் இப்பெறுமதி 3,102.2 மில்லியன் டொலராகக் காணப்பட்டது. (எ-இ)

## நெடுந்தீவுக்கான படகு சேவைகள் அதிகரிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 23
நெடுந்தீவுக்கான அரச படகுப் போக்குவரத்துச் சேவையை, ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் நெடுந்தீவிலிருந்து காலை 6.15, காலை 6.45 ஆகிய நேரங்களில் குறிகாட்டுவான் நோக்கிப் படகுச்சேவை இடம்பெறும். மீண்டும் குறிகாட்டுவானிலிருந்து காலை7.30, காலை 8.30 ஆகிய நேரங்களில் நெடுந்தீவை நோக்கிப் புறப்படும். மாலைநேரச்சேவையில் தேவையேற்படின் மேலதிக அரச படகுகளைச் சேவையில் ஈடுபடுத்தவும் ஏற்பாடாகியுள்ளது. அதேவேளை,நெடுந்தீவு- குறிகாட்டுவான் இடையேயான சேவையில் ஈடுபடும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பிலுள்ள வடதாரகை, நெடுந்தாரகை என்பன திருத்த வேலைகள் முடிந்து தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூன் 23
கொட்டாஞ்சேனையில் பெருமளவு போதைப்பொருள்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 3.94 கிலோகிராம் 'ஐஸ்' போதைப்பொருள் மற்றும் 215 கிராம் ஹெரோய்ன் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் ஈட்டப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 600,000 ரூபா பணமும் அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## ஒப்பீஸ் அதிர்ச்சிகள்–2

ஐ.சி. அலுவலா கரவெட்டி டீ.எஸ். ஒப்பீஸுக்குப் போனவருக்கு நடக்கிறதெல்லாம் கனவு மாதிரி இருந்திருக்கு.ஆள் உள்ளுக்க போனதும் வரவேற்புப் பகுதியில நிண்டவை 'வாங்கோ என்ன அலுவல்?' எண்டு கேட்டிட்டு பேரெல்லாம் கொம்பியூட்டரில பதிஞ்சு, ரோக்கன் ஒண்டு தந்து எந்தப் பக்கத்தால போனால் ஐ.சி.க்குப் பதியிற இடம் இருக்கெண்டு சிரிச்ச முகத்தோட வழி காட்டியிருக்கினம். அவை சொன்னமாதிரி ஐ.சி.க்குப் பதியிற பிரிவுக்குப் போனால் அங்க இதைவிட இன்னும் கவனிப்பு. போனதுமே 'இதில இருங்கோ' எண்டு ஒரு கதிரையைக் குடுத்திருக்கினம். இந்தாள் கொண்டு போன போர்ம் எல்லாத்தையும் வாங்கிப்போட்டு, 'ஒரு அஞ்சு நிமிசம் இருங்கோ, உடன செய்து தாறம்' எண்டு அதையெல்லாம் செக் பண்ணிப்போட்டு,மேலதிகாரியிட்ட ஓடிப்போய் சைனும் வாங்கியந்து குடுத்திருக்கினம். அதோட நிக்கேலை. 'வண்டே சேர்விஸில' குடுக்கிற தெண்டால் விடியவே போங்கோ. ரண்டு மணித்தியாலத்தில எடுத்திடலாம். அங்க நோர்மலா ரண்டாயிரம் கட்டொணும். அதைவிட ஐ.சி. துலைஞ்சதெண்டதால அதுக்கு ஒரு ஆயிரம் ரூபாவோட சேர்த்து மூவாயிரம் ரூபா கட்டோணும்' எண்டு கொழும்பில போய் என்னெண்டு ஐ.சி.எடுக்கிறதெண்ட வழியையும் சொல்லித்தான் அனுப்பினவையாம். போனவருக்கு வலு சந்தோசம். 'இப்பிடியெல்லாம் டீ.எஸ். ஒப்பீஸில அலுவல் நடக்குமோ? இது உண்மையா நடக்குதோ? இல்லாட்டி நான் ஏதும் கனவு காணுறனோ?' எண்டு கையை ஒருக்கா கிள்ளிப் பார்த்திருக்கிறார். சுள்ளெண்டு வலிக்க, 'அட உண்மையாத்தான் இதெல்லாம் நடக்குது' எண்டு உறுதிப்படுத்தி இருக்கிறார்.

போன அலுவல் முடிஞ்சதும், அவையிட்ட 'ஏன் முன்னுக்கு இந்த ரோக்கனை தந்தவை? முந்தியெல்லாம் இப்பிடித் தாறேலையே' எண்டு அவ்வளவு நேரமும் நெஞ்சுக்குள்ள முட்டிக்கொண்டிருந்த கேள்வியைக் கேட்டிருக்கிறார். 'ஓ, அதுவோ? இப்ப முந்தின மாதிரி சனங்கள் வீணா அலையக்கூடாதெண்டும், வந்த ஒழுங்கின் படி அவையின்ர அலுவலை முடிக்கோணும் எண்டுதான் இந்த ரோக்கன் சிஸ்ரம். உங்கட ரோக்கன் நம்பர் ஒழுங்கில தான் உங்களுக்கு வேலை நடக்கும். இடையில ஆரும் வந்து பூர முடியாது.அதோட எவ்வளவு பேர் ஒவ்வொரு நாளும் வருகினம், அவை வந்த அலுவல் எல்லாம் முடிஞ்சிருக்கோ? எண்டு நாங்களும் ஒருக்கா செக் பண்ணிப் பாக்கவும் இந்த சிஸ்டம் உதவியா இருக்கும்' எண்டு மூச்சுமுட்ட விளக்கம் சொல்லிச்சினம். நல்ல வேலைதான்.

வெளியால வந்த பிறகுதான் அவருக்கு ஒரு விசயம் தெரிய வந்திருக்குது. தேசியமட்டத்தில அரசாங்க ஒப்பீஸுகளுக்கு இடையில நடக்கிற 'உற்பத்தித்திறன்' போட்டிக்காகத்தான் கரவெட்டி டீ.எஸ். ஒப்பீஸில இப்பிடி ரோக்கன் சிஸ்ரம் எல்லாம் கொண்டந்திருக்கினமாம். முல்லைத்தீவில இருந்து புதிசா வந்த ஒரு பொம்பிளை டீ.எஸ். தான் கரவெட்டியில இப்பிடியெல்லாம் மாற்றங்களைக் கொண்டந்திருக்கிறாவாம். உந்த உற்பத்தித்திறன் போட்டிக்கு மட்டும் இப்பிடி நல்ல மாற்றங்களைச் செய்துபோட்டுக் கைவிடாமல், தொடர்ந்து இதேமாதிரி சனத்தை மதிச்சு, அவையின்ர அலுவல்களை உடனுக்குடன செய்து குடுத்தால் இந்த வருசம் மட்டுமில்லை, எல்லா வருசமும் கரவெட்டி டீ.எஸ். ஒப்பீஸ் உற்பத்தித்திறன் போட்டியில வெண்டுகொண்டே இருக்கலாம் கண்டியளோ!

padsi@uthayan.com –பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஊழல் குற்றச்சாட்டுடையவர்களே அரசாங்கத்துக்கு எதிராகக் கூட்டணி

### கைத்தொழில் அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 23**

**ஊழல் குற்றச்சாட்டுகளுக்காகச் சிறை செல்ல வேண்டிய தரப்பினரே, தற்போது அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்து அரசியல் கூட்டணியமைத்துள்ளனர் என்று கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், 2024ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் ரணில், சஜித் மற்றும் ராஜபக்சக்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கின்றனர். இவ்வளவு காலமும் ஒருவரை ஒருவர் பாதுகாத்து வந்த இவர்களின் பரம்பரை அரசியல், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வருகையுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் ஊழல்வாதிகள் அரசாங்கம் மீது போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தற்போது முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தீவிர விசாரணைகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலேயே சுரேஷ் சாலே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனால் படுகொலையாளர்களும், மஹிந்தவின் சகாக்களும் கலக்கமடைவது ஆச்சரியமில்லை. சுரேஷ் சாலேவின் நலன் விரும்பிகள் எனக்கூறிக்கொள்பவர்கள் தாராளமாக நீதிமன்றத்தை நாடலாம்-என்றார். (க-இ)

## கடன் மீளப்பெறல் விடயத்தில் சட்டம் அனைவருக்கும் சமன்

### சாணக்கியன் தெரிவிப்பு!

கொழும்பு,ஜூன் 23

சாதாரண குடிமகன் சிறிய கடனைச் செலுத்தத் தவறும்போது, மீட்பு நடவடிக்கை மிக விரைவாகவும், இரக்கமின்றியும் எடுக்கப்படுகின்றது. ஆனால், செல்வாக்குமிக்கவர்கள் பல வருடங்களாகத் தப்பித்துக் கொள்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

தயா குழுமம் மற்றும் தயா அப்பாரல் எக்ஸ்போர்ட் லிமிடெட் நிறுவனங்கள் தாக்கல் செய்த ரிட் மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதை வரவேற்று, தனது எக்ஸ் தளத்தில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார்.

குறித்த இரு நிறுவனங்களும் வாங்கிய 1.42 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிலுவைக் கடனை வசூலிக்க, வங்கியிடம் அடகு வைக்கப்பட்ட சொத்துகளை ஏலம் விடும் மக்கள் வங்கியின் சட்ட அதிகாரத்தை நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. கடன் பெற்றவர்கள் தொடர்ந்து கடனைச் செலுத்தாமல், ஏலத்தை ஒத்திவைக்கக் கோரி, வங்கியின் நடவடிக்கையை ஒரு வருடத்துக்கும் மேலாக தாமதப்படுத்தியதை நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. இது தொடர்பில் அவரது பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- கோப் குழுவின் அவதானிப்பின்படி இன்னும் பல பெரிய கடன் பெற்றவர்கள் கணிசமான சொத்துகளை வைத்துள்ளனர். அரச பணம் பொதுமக்களுக்குச் சொந்தமானது. பொறுப்புக்கூறல் என்பது யார் கடன்பட்டிருக்கிறார் என்பதைப் பொறுத்து மாறுபடக் கூடாது-என்றுள்ளது. (க-இ)

## கடந்த அரசாங்கங்களைக் குறைகூறி மக்களது வாழ்க்கையைப்பந்தாடாதீர்!

### நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23

கடந்த அரசாங்கங்களை விமர்சித்துக் கொண்டிருப்பதால், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது என்பதை தற்போதைய அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்தாலும், தேசியமட்டத்தில் விலையைக் குறைக்க அரசாங்கம் தயாராக இல்லை. எரிபொருளுக்கு மானியம் வழங்கப்படுவதாகக் கூறினாலும், விலைச்சூத்திரம் தொடர்பான உண்மை விபரங்கள் வெளியிடப்படவில்லை. முறையான வழிமுறைகளின்றி மாதந்தோறும் விலை அதிகரிக்கப்படுகின்றது. இதன் காரணமாக மக்களது வாழ்க்கைச் செலவு அதிகரித்து, உள்ளூர் தொழிற்றுறைகள் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளன. அரசாங்கத்தின் முறையற்ற கழிவு மேலாண்மை மற்றும் வடிகான் பராமரிப்பின்மை காரணமாக தலைநகர் கொழும்பு குப்பைகளால் மாசடைந்துள்ளது. டெங்கு நோய் தீவிரமடைந்துள்ளது. எனவே விமர்சனங்களை விடுத்து, மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டும்-என்றார். (க-இ)

## கட்சிகளுடன் இணையத் தயார்

### சஜித் அறிவிப்பு!

கண்டி,ஜூன் 23

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளினதும் தனித்துவத்தைப் பாதுகாத்து, கொள்கை ரீதியாக கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் பிறந்தநாளை முன்னிட்டு, கண்டி தேசிய மருத்துவமனைக்கு 30 இலட்சம் ரூபா பெறுமதியான ஹீமோ டயாலிசிஸ் இயந்திரத்தைக் கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடுத்தரப் பாதையைப் பின்பற்றும் ஐக்கிய மக்கள் சக்தியுடன், தீவிரப் போக்கு அரசியலிலிருந்து விடுபட்டு இணைந்து கொள்ளுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். இங்கு பதவிகளைப் பகிர்ந்து கொள்ளும் சூதாட்டங்கள் எதுவும் நடக்காது. 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மக்கள் போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துவிட்டனர். ரணசிங்க பிரேமதாஸவின் காலத்தில் உள்நாட்டுப் போரும், உலகளாவிய பொருளாதார நெருக்கடியும் இருந்தபோதிலும் மக்களுக்கு நலன்புரிச் சேவைகள் வழங்கப்பட்டன. ஆனால், தற்போதைய அரசாங்கம் வெற்றுப் பேச்சுகளால் மட்டுமே காலத்தைக் கடத்துகின்றது. அரசாங்கம் மக்கள் ஆணைக்கு அஞ்சுவதாலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கின்றது. எமது கட்சி தேர்தலை எதிர்கொள்ளத் தயார்-என்றார். (க-இ)

## சுரேஷ் சாலே மீதான விசாரணையை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும்

### உலகளாவிய இலங்கையர் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 23

சுரேஷ் சாலேவுக்கு எதிரான விசாரணைகளை, வெளிப்படையான நீதித்துறை செயல்முறைகள் மூலம் விரைவுபடுத்த வேண்டும் என்று உலகளாவிய இலங்கையர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேவின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு, மனிதாபிமான அடிப்படையில் விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

உத்தியோகபூர்வமாகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாமல் எந்தவொரு நபரையும் நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைக்கக்கூடாது. இலங்கையின் தேசிய பாதுகாப்புக்காகப் பல தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஒரு சிரேஷ்ட இராணுவ அதிகாரிக்கு, தடையற்ற மருத்துவ வசதிகளும், உரிய பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும். தடுத்து வைக்கப்பட்டுள்ள அவருக்கு ஏதேனும் துரதிர்ஷ்டவசமான சம்பவம் நேர்ந்தால், அதற்கு ஜனாதிபதி மற்றும் தடுப்புக்காவல் உத்தரவைப் பிறப்பித்த அதிகாரிகளே பொறுப்பேற்கவேண்டும்.

என்றுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# நம்மைச் சூழும் நச்சுச்சிலந்தி!


தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி உலகை நம் கைவிரல் நுனிக்குக் கொண்டுவந்துள்ள அதேவேளை, சமூக ஊடகங்களும் இணையத்தளங்களும் பெண்களை வேட்டையாடும் பேராபத்து மிக்க வெளிகளாக மாறிவருகின்றன. சமூக வலைத்தளங்கள் ஊடாக பெண்களுடன்நட்பை ஏற்படுத்தி, பின்னர் அவர்களை ஏமாற்றி நிதி மோசடி மற்றும் பாலியல் சுரண்டல்களில் ஈடுபடும் சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் சடுதியாக அதிகரித்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது. வெறுமனே பணத்தையோ, நகையையோ பறிப்பதோடு நின்றுவிடாமல், பாதிக்கப்பட்ட பெண்களுக்குப் போதைப்பொருள் கலந்த பானங்களை வழங்கித் துஷ்பிரயோகம் செய்வதும், சில சம்பவங்கள் படுகொலைகளில் போய் முடிவடைந்திருப்பதும் இந்த டிஜிற்றல் யுகத்தின் மிகக் கொடூரமான இருண்ட பக்கத்தை அப்பட்டமாகத் தோல் உரித்துக் காட்டியுள்ளது.

இணையவழி மோசடிக்காரர்கள் பயன்படுத்தும் உத்திகள் மிகவும் நுணுக்கமானவை. தனிமையில் இருப்பவர்கள், குடும்பப் பிரச்சினைகளால் மன உளைச்சலுக்கு ஆளானவர்கள் அல்லது வெளிநாட்டு வரன்களுக்காகக் காத்திருக்கும் பெண்களைக் குறிவைத்து, இவர்கள் தங்களின் போலியான அன்பையும் போலித்தகுதிகளையும் வலை வீசி எறிகின்றனர். 'திருமண வாக்குறுதி' என்ற ஒற்றை மாய வார்த்தையை நம்பி, முகம் தெரியாத நபர்களிடம் தங்களின் வாழ்நாள் சேமிப்புகளையும், நகைகளையும் பெண்கள் ஒப்படைப்பதுதான் குற்றவாளிகளுக்குக் கிடைக்கும் ஆகச்சிறந்த மூலதனமாகிறது. இதைவிடவும் ஆபத்தானது என்னவென்றால், ஆரம்பகாலத் தீராத நம்பிக்கையின் காரணமாகப் பகிரப்படும் தனிப்பட்ட புகைப்படங்கள் மற்றும் காணொலிகள், பிற்காலத்தில் தங்களின் கழுத்தை நெரிக்கும் 'மிரட்டல்' ஆயுதங்களாக மாறுவதை எமது பெண்கள் உணராமல் போவதுதான் மாபெரும் சோகமாகும்.

பாதிக்கப்பட்டவர்களின் அவலக்குரல்கள் அதிகரித்துள்ள பின்னணியில், நாடளாவிய ரீதியிலுள்ள புலனாய்வு மற்றும் சமூகப் பொலிஸ் பிரிவினர் இவ்வாறான நபர்கள் குறித்துத் தீவிரக் கண்காணிப்பிலும் விழிப்புணர்விலும் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத் தக்கது. எனினும், சட்ட நடவடிக்கைகளை விடவும் சுய விழிப்புணர்வே இதற்கான முதன்மை அரணாகும். இணையவழியில் பழகும் முகம் தெரியாத நபர்களுடன் எக்காரணம் கொண்டும் தனிப்பட்ட விபரங்களையோ, புகைப்படங்களையோ பகிர்வதைத் தவிர்க்கவேண்டும். அறிமுகமில்லாதவர்களைத் தனியாகச் சந்திப்பதையோ, அவர்கள் தரும் பானங்களை உட்கொள்வதையோ முற்றாக ஒழிக்கவேண்டும். டிஜிற்றல் வெளியில் காட்டப்படும் 'அன்பு' என்பது பல நேரங்களில் திட்டமிடப்பட்ட நச்சு என்பதைப் புரிந்துகொள்வதே விவேகம்.

சமூக ஊடகங்கள் என்பவை நமது வாழ்வை மேம்படுத்துவதற்கான கருவிகளேயன்றி, நமது வாழ்க்கையையே பணயம் வைப்பதற்கான சூதாட்டக் களங்கள் அல்ல. இத்தகைய விவகாரங்களில் ஏமாற்றப்பட்ட பெண்கள், அவமானத்திற்கு அஞ்சித் தற்கொலை போன்ற தீவிர முடிவுகளை எடுக்காமல் துணிச்சலுடன் சட்டத்தின் துணையை நாட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களோ அல்லது இது தொடர்பான தகவல் அறிந்தவர்களோ உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ, சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கோ அல்லது *118, 119, 107, 109* ஆகிய அவசர எண்களுக்கோ தொடர்பு கொள்ள முடியும். விழிப்புணர்வுள்ள ஒரு பெண்ணும், அவளுக்குத் துணையாக நிற்கும் விவேகமுள்ள ஒரு சமூகமும் மட்டுமே இந்த இணையவழிச் சிலந்திகளின் நச்சு வலைகளை அறுத்தெறிய உதவும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை**

**பொருள்:** தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம்போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்.




# 24 மணித்தியாலங்களில் 1,069 டெங்கு தொற்றாளர்

**கொழும்பு, ஜூன் 23**
**நாட்டில் 24 மணித்தியாலங்களில் 1,069 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர், மருத்துவர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.**

நடப்பாண்டில் பதிவான மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 45,037 ஆக உயர்ந்துள்ளதுடன், இதுவரை 28 மரணங்களும் பதிவாகியுள்ளன. சாதாரணமாக நாளொன்றுக்கு 150 முதல் 200 வரையான நோயாளர்களே பதிவாகும் நிலையில், தற்போது நாளாந்த பாதிப்பு 1,000ஐ கடந்துள்ளமை கவலைக்கிடமான நிலைமையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். டெங்குப் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதால், நிலைமையைக் கட்டுப்படுத்த சுகாதார மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாகத் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-இ)



## டெங்கைக் கட்டுப்படுத்துவதில் மக்களின் ஒத்துழைப்பு இல்லை!

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் கவலை

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பொதுமக்கள் மத்தியில் இன்னும் எவ்வித ஆயத்தமும் இல்லை என கொழும்பு மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் அமித் குமார் கவலை வெளியிட்டுள்ளார். ஆங்காங்கே கண்டறியப்படும் நுளம்பு குடம்பிகளின் எண்ணிக்கையே இதற்குச் சான்றாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அபராதம் விதிப்பதன் மூலமோ அல்லது புகை விசிறல் மூலமோ மட்டும் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என வலியுறுத்திய அவர், இதற்குப் பொதுமக்களின் பங்களிப்பு இன்றியமையாதது-என்றார். நுளம்புகள் பெருகும் இடங்களைக் கட்டுப்படுத்தாமல் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரசாங்கத்தால் விசேட திட்டம்

கொழும்பு, ஜூன் 23
கொழும்பு நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக, தொடர்மாடிக் குடியிருப்புகளை நவீனமயமாக்கும் விசேட திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில், நகர அபிவிருத்தி அதிகார சபை இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன் முதற்கட்டமாக கொழும்பு 09, தெமட்டகொட, மிஹிந்துசென்புர மற்றும் சியபத் செவன ஆகிய அடுக்குமாடிக் குடியிருப்புத் தொகுதிகளில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் ஆரம்பம் மற்றும் தற்போதைய நிலையை நேரில் கண்டறிவதற்காக, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க கடந்த 20ஆம் திகதி அங்கு கள ஆய்வு நடத்தியுள்ளார். (எ-இ)

## யானை தாக்கி இருவர் சாவு

இறக்குவானை விகாரையொன்றில் உற்சவத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்த யானை தாக்கியதில் பாகனும், உதவியாளரும் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை இறக்குவானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## வெடிபொருள்கள் மீட்பு

திருகோணமலை, ஜூன் 23
திருகோணமலை, கும்புறுப்பிட்டி, கொம்பன்குளம் காட்டுப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பெருமளவிலான வெடிபொருள்கள் மற்றும் ஆயுதப் பாகங்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளனர். கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் கடந்த 18ஆம் திகதி இச்சோதனை நடத்தப்பட்டது. போர்க் காலத்தில் பீப்பாய் ஒன்றில் இட்டு புதைக்கப்பட்டிருந்த துருப்பிடித்த ரி56 தோட்டாக்கள், பிஸ்டல் தோட்டாப் பைகள், கம்பிகள் உள்ளிட்ட பல பொருள்கள் மீட்கப்பட்டு குச்சவெளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அங்கு கண்டெடுக்கப்பட்ட 2.5 கிலோ எடையுடைய கிளைமோர் குண்டு மற்றும் 2 மிதிவெடிகள் என்பன, நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் வரை பாதுகாப்புக் காரணங்களுக்காக கண்டெடுக்கப்பட்ட இடத்திலேயே பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# வடமாகாண பாடசாலைகளின் சிறந்த வீரர்களுக்கு விருதுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான பெரு விளையாட்டுகளில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் எல்லே போட்டியில் ஆண்கள் பிரிவில், வரணி மத்திய கல்லூரி தர்மிலன், பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு ஐயன்குளம் மகா வித்தியாலயம் பிரியங்கா, வொலிபோல் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மதுவிஷன், முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயம் அனோசிகா. கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் சிதம்பரக் கல்லூரி அபிஷாந், கனகபுரம் மகா வித்தியாலயம் அபிஷா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரிம சீலன், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் மகாவித்தியாலயம் ஜொபோஷினி. மேசைப்பந்தாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரிலோகித், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஜவானா, சதுரங்கத்தில் யாழ். இந்துக் கல்லூரி ஜங்கன், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை நர்த்தவி எறிபந்தாட்டத்தில் மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம் மதுஷன், அக்சயா கரம் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி தீபிகன், சுழிபுரம் விக்டோரியா கல்லூரி பிரணவி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பூப்பந்தாட்டத்தில் மன்னார் பற்றிமா மகாவித்தியாலயம் நிகாஷன் தற்குரூஸ், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் மேரி பெர்லின் பெரேரா. கபடியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி துவாரகன், பிரணவி. மென்பந்து கிரிக்கெட்டில் சென். ஜோன்ஸ் கல்லூரி ஜோன் நதேனில், நடேஸ்வராக் கல்லூரி அனுஸ்கா வலைப்பந்தாட்டத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி தங்கவி கராத்தே போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி தமிழ்நிலவன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மிஷாஜினி கைப்பந்தாட்டத்தில் பரந்தன் இந்து மகாவித்தியாலயம் துஷாந், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம் திருஷா அரை மரதன் போட்டியில் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம் ஏ.எம். அதீக், முல்லைத்தீவு பாரதி மகாவித்தியாலயம் அனித்தா, கடினபந்து கிரிக்கெட்டில் யாழ். இந்துக் கல்லூரி பிரேமிகன் யூடோ போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஐங்கரன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அபிஷன், இரணப்பாலை ரோமன் கத்தோலிக்க பாடசாலை அபிஷாளினி தைக்கொண்டோ போட்டியில் பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயம் டினோசன் சில்வா, தட்சணாமருதமடு மகாவித்தியாலயம் கோனிலா மல்யுத்தப் போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி எழிலன், கொக்குவில் இந்துக் கல்லூரி ஜதுஷா நீச்சல் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி ஆனந்த சாரங்கன், கிளிநொச்சி மகாவித்தியாலயம் வெண்ணிலா காற்பந்தாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சஞ்சய், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி லயன்சிகா ரெனிஸ் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி ரினோசன், உரும்பிராய் இந்துக் கல்லூரி சுயானிகா பளுதூக்கும் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி தர்சனன், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் கோஷிகா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (க-422)



புத்தூர் சிவன்கோவில் தேர்த் திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (க-17)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கடவையம்பதி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.29 மணிக்கு ஆரம்பமாகும். இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் 7 மணி முதல் எண்ணெய்க்காப்புச் சாத்தல் நிகழ்வு இடம்பெறும். கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. (க-17)




மாகாணமட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில், மானிப்பாய் சோதிவேம்படியின் தரம் 5 பெண்கள் அணியினர் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (க-555)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். வாழ்க்கைத்துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** பயணங்களையும் கடன் வாங்குவதையும் தவிர்க்கவும். உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் -மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்து விடும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும்.

**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## 27ஆவது கலாவித்தகர் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 23

வட இலங்கை சங்கீத சபையின், 27ஆவது கலாவித்தகர் பட்டமளிப்பு விழா, மருதனார்மடத்தில் உள்ள வட இலங்கைசங்கீதசபைமண்டபத்தில்கடந்தசனிக்கிழமை இடம்பெற்றது. ணமங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான விழாவில், கலைஞர்கள் கௌரவிப்பு மற்றும் கலாவித்தகர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. வட இலங்கை சங்கீத சபையின் தலைவரும் வலயக்கல்விப் பணிப்பாளருமான மாலதி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (க-27)



## ஓடக்கரை சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு விழாப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 23

பருத்தித்துறை ஓடக்கரை சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டுவிழா மற்றும் விளையாட்டுப்போட்டிகள், சனசமூக நிலைய முன்றலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

இதில் மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி (15 கிலோமீற்றர்) காலை சனசமூக நிலைய முன்றலில் இருந்து ஆரம்பமாகி இடம் பெற்றது. தொடர்ந்து மாலை சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. (க-100)






## தமிழ்மொழித் தினப்போட்டியில் மெதடிஸ் மாணவிகள் சாதனை

யாழ்ப்பாணம்,ஜூன் 23

வடக்கு மாகாண அளவில் நடாத்தப்பட்ட தமிழ்மொழித் தினப் போட்டிகளில், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை சார்பில் பிரிவு 2 பேச்சுப்போட்டியில் இலக்கியா கிருபாகரன் முதலாம் இடத்தையும், பிரிவு 4 பேச்சுப்போட்டியில் சிவாஜினி பிரதீபன் முதலாம் இடத்தையும், பிரிவு 1 பா ஓதல் போட்டியில் வர்மிஷாஶ்ரீ சிவகுமாரன் மூன்றாம் இடத்தையும், வில்லுப்பாட்டு (திறந்த போட்டி) போட்டியில் பங்கேற்ற குழுவினர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (க-100)



## நுழைவாயில் திறப்பு

மன்னார், ஜூன் 23

வளர்கலை மன்றத்தால் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய வீதியில் ஆலய நுழைவாயிலை நிர்மாணித்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு பொன் விழாவை நினைவுகூரும் முகமாக ஐம்பது இலட்சம் ரூபா செலவில் இந்த நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை செப வழிபாட்டுடன் நுழைவாயிலை திறந்துவைத்தார். நிகழ்வில் வளர்கலை மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-60)



தலைவர் கிண்ண

## உதைபந்தாட்டப் போட்டியில் இரு அணிகளும் சமநிலை

யாழ்ப்பாணம்,ஜூன் 23

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் 40 வயதுக்கு மேற்போட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் கடந்த சனிக்கிழமை ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வடமராட்சி சிரேஷ்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் க.சொக்கன் (சசிகுமார்) ஞாபகார்த்தமாக அபிராமி இரும்பகத்தின் அனுசரணையுடன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமானது.


குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ரேஞ்சர்ஸ் அண்ணாசிலையடி அணிகள் மோதின.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் கோல் அடிக்க தீவிரமான ஆட்டத்தை வெளிப்படுத்தின. விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல் அடித்த நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுக்கு வந்தது. இதையடுத்து இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளி வழங்கப்பட்டது.

அண்ணாசிலையடி அணியின் வீரர் சுதன் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டு, பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டார். (க-100)

படங்கள்: ஐ. சிவசாந்தன்





யாழ்ப்பாணம் - நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா 2026 கடந்த சனிக்கிழமை ஏழாலை புனித இசிதோர் தேவாலய வளாகத்தில் நடைபெற்றது.

புனித இசிதோர் தேவாலயப் பங்குத்தந்தை அருட்பணி மைக்கல் முத்து நிக்சன் கொலின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ் பிரதம விருந்தினராகவும், யாழ்.ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையின் அதிபர் திருமதி சந்திரலதா கனேந்திரன் சிறப்பு விருந்தினராகவும், ஏழாலை தமிழ்ப் பொதுப் பணிமன்றத் தலைவர் கந்தசாமி சிறியானந்தன், சமூக சேவையாளர் ம.சுரேஷ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். இதன்போது மழலைகளின் விளையாட்டு நிகழ்வுகள், வினோத உடை நிகழ்வு, இசையும் அசைவும் நிகழ்வு என்பன இடம்பெற்றன. (எ-41-66)

## திறப்பு விழா


கிளிநொச்சி, ஜூன் 23

வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் கல்மடு நகரில் அமைந்துள்ள கிராமிய சித்த வைத்தியசாலை மற்றும் மாகாண மூலிகைத்தோட்டம் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியர் விடுதி திறப்பு விழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின்கீழ் ரூபா 15.64 மில்லியன் செலவில் இக்கட்டுமானம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடுதிக் கட்டுமானம் சுதேச வைத்திய சேவைகளை மேம்படுத்துவதற்கும், வைத்தியர்களுக்கான வசதிகளை விருத்தி செய்வதற்கும் முக்கியமான முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் ஆணையாளர் வைத்தியக் கலாநிதி தி. சர்வானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன் சிறப்பு விருந்தினராகவும் மற்றும் சுதேச வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (எ-41)





திருநெல்வேலி சிவன் அம்மன் வீதி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (க-17)





சாவகச்சேரி சந்திரசேகரர் வாரிவனநாத சிவன் கோவில் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (க-9)

## சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய பனம்பொருள் உற்பத்தி நிலையம்

மன்னார், ஜூன் 23

மன்னார் தரவன் கோட்டைப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய, பனம்பொருள் உற்பத்தி நிலையத்துக்கு எதிராக சுகாதாரத் துறையினர் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர். குறித்த உற்பத்தி நிலையத்தில், சுகாதாரமற்ற முறையில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக, அங்கு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மன்னார் நகரசபை மற்றும் மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையின் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த பகுதியில் சோதனைகளை முன்னெடுத்தனர். இதன்போது அங்கு பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்து குறித்த நிலையத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வடமாகாணத் தடகளம்

# கருவேப்பங்குளம் அ.த.க. பாடசாலை தட்டெறிதலில் வென்றது தங்கம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில், 16 வயதுப் பெண்கள் பிரிவில் வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்குத் தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது. வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சரணியா 26.75 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும், கெருடாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எம். கம்ஷா 26.49 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.ஆயிலை 25.99 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (ம-4-22)

# சாதனை படைத்த மாணவர்கள் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூன்.23

2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற க. பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பதற்கு, கலாநிதி அலவி ஷரீப்தீன் கல்வி சகாய நிதியம் ((Dr Alavi Sheriffdeen Edu Support Fund ) மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. மாணவர்களின் சிறந்த கல்விச் சாதனைகளை அங்கீகரித்து ஊக்குவிக்கும்நோக்கில் இந்தச் சிறப்பு விருது நிகழ்ச்சி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் கலாநிதி அலவி ஷரீப்தீன் நிதி உதவி பெறும் மாணவர்களாகவும், கலாநிதி அலவி ஷரீப்தீன் முன்னோடிகளின் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களாகவும், வலுவூட்டல் திட்ட மாணவர்கள் அல்லது கலாநிதி அலவி ஷரீப்தீன் கல்வித் திட்டங்களின் தொண்டர்களின் பிள்ளைகளாகவும், உயர்தரக் கல்விக்கான நிதி உதவியைக் கோரும் தேவையுடைய குடும்பங்களைச் சேர்ந்த சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களாகவும் இருத்தல் வேண்டும். தகுதியான மாணவர்கள் ஜூன் 25ஆம் திகதிக்கு முன்னர் https://forms.gle/ VNK9rH1x7wPS481h6 என்ற இணைப்பைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம். மேலதிக தகவல்களை office@eduaid.fund என்ற இணையத்தள முகவரியுடன் தொடர்புகொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 03 . 1937

மறைவு 20 . 06 . 2026

## தம்பிஜயா தங்கராசா (பாலர்)

எழுதுமட்டுவாள் விழுபளையை பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா தங்கராசா (பாலர்) 20.06.2026 சனிக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா மாரிமுத்து தம்பதியின் அன்பு மகனும், ஜெயலச்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, செல்லம்மா, மாரியம்மா, சிவபாக்கியம், சுப்பிரமணியம், சுந்தரம், கந்தசாமி மற்றும் சிவராமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மாலினி, பாரதி, ஜெயந்தி, தர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தயா மற்றும் சிவகரன், ஜெயா, சுதா ஆகியோரின் அன்பு மாமனும், மாறன், நிவேதன், சஞ்ஜீபன், தாட்ஷா, சியான், சகானா, சந்தியா, லச்சு, தனிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும், தீரன், ருத்ரன், டியா, ரியான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2026) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் உசன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விழுபளை இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
077 618 6904

(CS/331728) S-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 10 . 1946

மறைவு 21 . 06 . 2026

## நாகலிங்கம் அப்புலிங்கம்

### (ஸ்தாபகர் லிங்கம் கிறீம் ஹவுஸ்)

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அப்புலிங்கம் (ஸ்தாபகர் லிங்கம் கிறீம் ஹவுஸ்) அவர்கள் 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் இராசையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாம்பிகை அப்புலிங்கம் அவர்களின் பாசமிகு கணவரும், கீதா (இலங்கை), கீதராஜ் (லண்டன்), கீதாகரன் (கனடா), கீதரமணன் (அமெரிக்கா), கீதசகிலன் (இலங்கை) ஆகியோரின் அன்புத்தந்தையும், வசந்தகுமார், கலா, அகல்யா, வித்யா, ரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாலசிங்கம், கௌரீஸ்வரி மற்றும் திலகவதி, இரத்தினபூபதி, கமலாதேவி, மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், மனோன்மணி, தெய்வேந்திரம், மகாலிங்கம் மற்றும் கந்தசாமி, இரத்தினசிங்கம், பரமாநந்தன், சண்முகநாதன், தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் நாகேஸ்வரி, ராகினி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் சகலனும், கபிலயன், வேணுகன், பாணுகன், ஹரிஸ், பிரவீனா, பிருத்திகா, சயாணுகா, மகதீஸ், பவனேஸ், கவினாஸ், சிவாங்கி ஆகியோரின் அன்புத்தாத்தாவும் ஆவார்.

பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் (75/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) 21.06.2026 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 24.06.2026 புதன்கிழமை காலை 10 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, அதனை தொடர்ந்து இறுதிக்கிரியைகள் நடைபெறும், பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
லிங்கம் கிறீம் ஹவுஸ்
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு,
வசந்தகுமார் (மருமகன்) - +94 76 097 8003
கீதசகிலன் (மகன்) - +94 77 711 1410

(CS/32037) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஜுன் 23

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை தும்பாலை பகுதியிலுள்ள வயலில் யானையொன்று இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. வயல் பகுதியில் இணைக்கப்பட்டிருந்த மின்வேலி யில் சிக்கி இந்த யானை உயிரிழந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த வெல்லாவெளிப் பொலிஸார் குறித்த வயலின் உரிமையாளரை கைது செய்துள்ளனர். (ச-இ)



# ஏக்கிய இராஜ்ஜிய அரசியலமைப்பை நிறைவேற்ற தமிழரசுக் கட்சி தீவிரம்

## கஜேந்திரகுமார் எம்.பி.எச்சரிக்கை!

**யாழ்ப்பாணம், ஜுன் 23**

**புதிய அரசியலமைப்பு என்ற பெயரில் ஏக்கிய இராஜ்ஜிய (ஒற்றையாட்சி) அரசியலமைப்பை, தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து நிறைவேற்றுவதற்குத் தமிழரசுக் கட்சி தீவிரம் காட்டி வருவதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார். இது நிறைவேறினால் தமிழர்கள் உரிமைகளை இழந்து அடிமையாகும் பேராபத்து ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.**

பருத்தித்துறை கோரியடிப் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பேசிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டுள்ள அரசாங்கம், நல்லாட்சிக் காலத்தில் (2015-2019) தயாரிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பை நிறைவேற்ற முயல்கிறது. இதற்கு ஆதரவளிப்பதில் சுமந்திரன் தீவிரமாக உள்ளார். வடக்கு, கிழக்கின் 19 நாடாளுமன்ற உறுப்பினர்களில் எங்களைத் தவிர ஏனைய 18 பேரும் இதற்கு ஆதரவளிக்கும் நிலையே காணப்படுகிறது. வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ள 8 நாடாளுமன்ற ஆசனங்களை சர்வதேச ரீதியில் தமக்குக் கிடைத்த ஆணையாக அவர்கள் காட்டி வருகின்றனர். ஆனால், இந்த அரசியலமைப்பு மாற்றத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும். இல்லையெனில், நாடு முற்றிலும் சிங்களவர்களுகானதாக மாற்றப்பட்டுவிடும். எனவே, தமிழ் மக்கள் தங்களின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்கக்கூடாது என அவர் வலியுறுத்தினார். (எ-100)

# சுகாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு மன்னாருக்கு நிதி ஒதுக்கீடு தாராளம்

வடக்கு மாகாண சுகாதாரத் துறைக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட்டில், மன்னார் மாவட்டத்துக்கு 21.7 சதவீதமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக 2026 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு மொத்தமாக 3,096.68 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.இதில் யாழ்ப்பாணத்துக்கு 984.54 மில்லியன் ரூபாவும், மன்னாருக்கு 672.04 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவுக்கு 531.13 மில்லியன் ரூபாவும், வவுனியாவுக்கு 461.70 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சிக்கு 307.53 மில்லியன் ரூபாவும், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு 139.75 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மன்னார் மாவட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள 672.04 மில்லியன் ரூபா நிதி மாவட்டத்தின் பல்வேறு செயற்றிட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதே வேளை இந்திய நிதியுதவியில் 230 மில்லியன் ரூபா, மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் நிர்மாணப் பணிகள் மற்றும் உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.இந்தியாவின் ஒட்டுமொத்த நிதியுதவியான 600 மில்லியன் ரூபாவில், இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி இதுவாகும். அத்துடன் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் 205.32 மில்லியன் ரூபா, உலக வங்கியின் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு முறைமை மேம்பாட்டுத் திட்டத்தில் 85 மில்லியன் ரூபா, பராமரிப்புப் பணிகளுக்கு 74.29 மில்லியன் ரூபா, ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி 36.73 மில்லியன் ரூபா, டித்வா விசேட செயற்றிட்டத்துக்கு 34 மில்லியன் ரூபா, திறன் மேம்பாட்டு நன்கொடை நிதி 6.70 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது-என்றுள்ளது. (க-113)



# யாழ்ப்பாணம்-கொழும்பு இடையிலான ரயில் சேவைகளை அதிகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன் 23

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான ரயில் சேவைகளை அதிகரித்தல், நேர அட்டவணைகளை மீளமைத்தல் மற்றும் உட்கட்டமைப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

வடக்கு மாகாணத்துக்கு பெருமளவான சுற்றுலாவிகள் வருகை தருவதாலும், பாதுகாப்பான மற்றும் நேரத்தை மீதப்படுத்தும் பயணமாக ரயில் போக்குவரத்து அமைவதாலும், கொழும்பு-யாழ்ப்பாணம் இடையிலான ரயில் சேவைகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ரயில்வே பொது முகாமையாளர், ரயில் இயந்திரங்களுக்கான பற்றாக்குறையே சேவைகளை முழுமையாக மீள ஆரம்பிப்பதில் பிரதான தடையாக உள்ளது. எனினும், புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்காலிகமாகச் சேவைகளை அதிகரிப்பது மற்றும் பகல் நேர ரயில் சேவைகளை ஒழுங்கமைப்பது தொடர்பில் ஆராய்ந்து துரித நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். தொடர்ந்து 'யாழ். ராணி' ரயில் சேவையை வவுனியா வரை நீடித்தல், அநுராதபுரம் வரை மாத்திரமே முன்னெடுக்கப்படும் சரக்கு ரயில் சேவையை, காங்கேசன்துறை வரை விரிவுபடுத்தல் தொடர்பிலும் ஆராயப்பட்டன. (க-27)

**ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் கோயில்**
**( தோப்படைப்புப் பிள்ளையார் )**

**வருடாந்த பொதுக்கூட்டம் - 2026**

- **இடம்- ஆலய மண்டபம்**
- **நாள்- (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம்- பி.ப 3.30 மணி**

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது குறித்த நேரத்திற்கு சமுகமளிக்கும்படி இறையன்புடன் வேண்டுகின்றோம்.

**ஐயனார் கோயிலடி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**கௌரவ செயலாளர்,**
**ஆலய பரிபாலன சபை.**

**நாஹா மருத்துவ நிலையம்**

கை, கால் கடுமையான விறைப்பு, வீக்கம், எலும்பு தேய்வு, மூக்கு வயர் பொருத்தி அவஸ்தையில் உள்ள பாரிசவாதம், சிறுநீரக பாதிப்பு, மர்மகட்டிகள், அல்சர், தீராத புண்கள் - சிறப்பு மருந்தியல்
வங்கி முன் லேன், சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி, மானிப்பாய் (ஜெகபதி வீடு)
(CS/61727) J-1

**T.P : 077 321 2740**

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் இருவர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(CS/61731) J-1

**077 345 0039, 076 697 1012**

ஏழாலை தெற்கு, களபாவோடை, "வசந்தபுரம்"

**ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**



**இலட்சார்ச்சனை**

எதிர்வரும் 24.06.2026 அன்று புதன்கிழமை காலை 6.00 - 11.30 மணிவரை இலட்சார்ச்சனை நடைபெற்று தொடர்ந்து விசேட பூஜைகள் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும்.

தொடர்ந்து அன்றையதினம் மாலை 3.00 - 6.30 மணிவரை இலட்சார்ச்சனை நடைபெற்று அடியவர்களுக்கு இராப்போஷனம் வழங்கப்படும்.

**சங்காபிஷேகம்:-**

எதிர்வரும் 25.06.2026 அன்று வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு 108 சங்குகளால் அம்பிகைக்கு சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து விசேட பூஜைகள் இடம்பெற்று சுவாமி வீதி உலா வந்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**தேவஸ்தானம்**
(CS/61728) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### பயங்கரவாதத்...

படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆடைத் தொழில்துறையை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

சட்டவிரோதமானமுறையில்ஈட்டப்படும் பணம் எமது நாட்டிலிருந்து வெளியில் செல்வதைத் தடுப்பதற்காக, சட்ட மற்றும் தொழில்நுட்ப வழிமுறைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி அநுர இதன் போது சுட்டிக்காட்டினார். தமது பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் நேரடியாக முன்வைக்க வாய்ப்பளித்தமைக்காக முதலீட்டாளர்கள் இதன்போது ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லும்போது ஏற்படும் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரி களுடன் கலந்துரையாடுவதற்கு மாதாந்தம் ஒரு சந்திப்பை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர் அந்தக் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரைவிடுத்தார். (அ-ம)

### வவுனியா...

எட்டு மாதங்களாக முடங்கியிருந்தது. இது தொடர்பில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு இடம் பெற்று வந்த நிலையில், சபையை கொண்டுநடத்தும்படி நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியது. இதற்கு அமைய முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் வவுனியா மாநகர சபை அமர்வு நேற்று மீண்டும் இடம் பெற்றது. இதன்போதே, முதல்வர் காண்டீபன் தலைமையில் அமர்வு இடம்பெறுவதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து பெரும் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

குழு விவாதமாகவே சபையை நடத்த முடியும் என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்ததைத் தொடர்ந்து, 10 நிமிடங்களுக்கு முதல்வரால் சபை ஒத்திவைக்கப்பட்டது. முடிவில் குழுநிலை விவாதமாகவே சபை தொடர்ந்தும் இடம் பெற்றது. இதேவேளை, 'மாநகர மக்களே விழிப்படையுங்கள்', 'கட்டளைச் சட்டங்களை மீறவேண்டாம்', 'சபையின் சொத்துகளை விற்காதே' போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் சபைக்குள் ஏந்தியிருந்தனர். (அ-ம-110)

### பெண்...

கிளிநொச்சி பிரமந்தனாறு ஆறாம் வாய்க்கால் பகுதியில் வசித்துவந்த அறிவரசன் டினுசியா என்ற இரண்டு வயதுப் பெண் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

தாயும், குறித்த குழந்தையும் அயலவர் வீட்டுக்குச் சென்றுள்ளனர். இதன் போது குழந்தையின் தாய் தனது கணவனுக்கு உணவு கொடுப்பதற்காக அயலவர் வீட்டிலேயே சிறுமியை விட்டுவிட்டுச் சென்றுள்ளார். அந்த வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியைக் காணாத நிலையில் அயலவர்கள் பதற்றமடைந்து தேடிய போது அந்தச் சிறுமி பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் வீழ்ந்திருப்பதைக் கண்டனர்.

இதையடுத்து, அந்தக் குழந்தை உடனடியாக மீட்கப்பட்டு தருமபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள் அந்தக் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று கூறியுள்ளனர். மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-55-66)

### வடமாகாணத்...

பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ-ம-66-26)

### ராஜபக்சக்கள்...

பழிவாங்கலுக்கு உட்படுகின்றனர் இவ்வாறு மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மரண வீடொன்றுக்கு நேற்றுச் சென்றிருந்த மஹிந்த ராஜபக்ச ஊடகங்களிடம் மிகச் சுருக்கமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

திசைகாட்டி அரசாங்கம் ராஜபக்சக்களைப் பழிவாங்கும் நோக்குடன்தான் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு நாளும் இந்தப் பழிவாங்கல் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. மாறாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதனால் அரசாங்கத்தின் மீது மக்கள் மிகவும் அதிருப்தியில் உள்ளனர் - என்றார். (அ-ம-இ)

### தாக்குதல்...

தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலை வைத்து கோத்தாபய ராஜபக்ச பிரதிபலன் அடைந்தார் என அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ உள்ளிட்டவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுன, சுதந்திரக்கட்சி உள்ளிட்ட கூட்டணியே வெற்றிபெற்றது. இதன்போது கிடைத்த வாக்குகளை அடிப்படையாகக்கொண்டு பார்த்தால், ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் 56 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெறுவார் என்பது உறுதியாகி இருந்தது. எனவே, தாக்குதலை நடத்தித்தான் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்றநிலை கோத்தாபயராஜபக்சவுக்கு இல்லை. எனவே, உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்மூலம் கோத்தாபய ராஜபக்ச பிரதிபலன் அடைந்தார் எனக் கூறுவதை ஏற்க முடியாது.

ஆனால் பிரதிபலன் அடைந்த ஒருவர் இருக்கின்றார், உயிர்த்தஞாயிறு தாக்குதலை பலம்பொருந்திய தரப்பொன்றே நடத்தியுள்ளது எனவும், அந்தத் தரப்பை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமெனில் தான் பதவியில் இருக்க வேண்டும் என வத்திக்கானுக்கு தெரியப்படுத்தி, பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை 4 தடவைகள் பதவி நீடிப்பை பெற்றுள்ளார் - என்றார். (அ-ம)

### வழக்கம்பரையில்...

லேயே இந்தக் கத்திவெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதன்போது நபரொருவர் படுகாயம் அடைந்த நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

### இராணுவ...

வலிகாமம் வடக்கில் படையினரின் பிடியிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். அமைச்சர் சந்திரசேகரும், பாதுகாப்பு அமைச்சின் முக்கியஸ்தர்களும் காணி விடுவிப்புத் தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். எனினும், மறுமுனையில் பொதுமக்களின் பகுதிகளுக்குள் தமது அத்துமீறல் கட்டுமானங்களை இராணுவம் தொடர்ச்சியாக அமைத்து வருகின்றது.

யாழ்ப்பாணம் வயாவிளான் பகுதியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து இராணுவ மருத்துவமனை அமைக்கப்பட்டு வந்தது. அது போல், பருத்தித்துறை பொன்னாலை வீதியிலும் இராணுவக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டு வந்தன. அவற்றை அகற்றுமாறு வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன் அறிவித்தல் அனுப்பிய போதிலும் அந்தக் கட்டுமானப் பணிகள் தற்போது எந்தத் தடங்கலும் இல்லாமல் இராணுவத்தால் முழுமையாக்கப்பட்டுள்ளன.

இதைவிட தற்போது குரும்பசிட்டியில் ஒருங்கிணைந்த பண்ணையொன்றையும் இராணுவத்தினர் அமைத்து வருகின்றனர். இதற்கான பணிகள் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. எனவே அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு முரணாக இடம் பெறும் இந்த ஆக்கிரமிப்புக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்தவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)



### 13 என்புத்...

குழியின் மூன்றாம்கட்ட அகழ்வு பணியின் 31ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன் போதே, மேலும் 13 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன், 7 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இதன்படி செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 412 என்புத் தொகுதிகள் அடையளாம் காணப்பட்டுள்ள நிலையில், 390 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுபோக உர மானியம் 90 சதவீதம் விநியோகம்

சிறுபோகப் பயிர்ச்செய்கைக்கான உர மானியம், தகுதியுடைய 90 சதவீதமான விவசாயிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. மீதமுள்ள விவசாயிகளுக்கான உரமானியத்தொகையும் கூடிய விரைவில் அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகவைப்புச்செய்யப்படும் என அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தம்மிகா ரணதுங்க தெரிவித்துள்ளார். விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் கருத்திற்கொண்டு, அரசாங்கத்தால் வழங்கப்படும் உரமானியத்தொகை இந்த முறை 5,000 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி ஒரு ஹெக் டேயருக்கு 25,000 ரூபா வழங்கப்பட்டது. இந்த உர மானியத்தொகை எவ்வித தவணைக் கட்டணங்களும் இன்றி, ஒரே தடவையில் விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் நேரடியாக வைப்புசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தித் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சஹ்ரான் தங்கியிருந்த அறை விபரம் மறைப்பு

கொழும்பு, ஜூன் 23

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிம் தங்கியிருந்த சங்கிரில்லா ஹோட்டல் அறை தொடர்பில் முழுமையான விபரங்கள் மேற்கொள்ளப்படவில்லை. அவருக்கு முன்னர் அந்த அறையில் தங்கியிருந்தவர்களின் விபரங்கள் தொடர்பில் அரசாங்கம் விரிவான விசாரணை நடத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு முதல் நாள் சஹ்ரான் சங்கிரில்லா ஹோட்டலின் 116ஆம் இலக்க அறையில் தங்கியிருந்துள்ளார். தாக்குதலுக்குப் பின்னர் ஹோட்டலின் அனைத்து அறைகளிலும் இரண்டு வாரங்களாகத் தங்கியிருந்தவர்களின் விபரங்கள் திரட்டப்பட்ட போதிலும், சஹ்ரான் இருந்த அறையின் விபரங்கள் மாத்திரம் மறைக்கப்பட்டுள்ளமை வழக்கு விசாரணைகளின் போது அம்பலமாகியுள்ளது. பதிவு செய்யாமல் தங்கும் இத்தகைய சலுகைகள் முக்கியமான பிரமுகர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். அந்த அறையின் கதவைத்திறக்க இலத்திரனியல் அட்டை பயன்படுத்தப்பட்ட விபரங்கள் பதிவாகியுள்ளன. எனவே அங்கு தங்கியிருந்த நபர் யார் என்பதை அரசாங்கம் கண்டறிய வேண்டும்-என்றார். (க-இ)

# மனச்சாட்சியற்ற அரசாங்கம்

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. விசனம்

கொழும்பு, ஜூன் 23

கடந்த மார்ச் மாதத்தில் போதிய எரிபொருள் கையிருப்பில் இருப்பதாகக் கூறி, புதிய கப்பல்கள் எதுவும் வராத நிலையிலும் 4 முறை விலையை உயர்த்திய மனச்சாட்சியற்ற அரசாங்கம் இது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் விமர்சித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்தாலும், விலையை உடனடியாகக் குறைப்பதற்கு நாடு ஒன்றும் எரிபொருள் கடையல்ல எனப் பிரதமர் தெரிவித்த கருத்தை ஐக்கிய மக்கள் சக்தி வன்மையாகக் கண்டிக்கின்றது. உலக சந்தையில் விலை அதிகரிக்கும்போது இங்கு விலையை உயர்த்தும் அரசாங்கத்தால், விலை குறையும் போது ஏன் குறைக்க முடியாது. மத்திய கிழக்குப் பதற்றம் தணிந்து உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளபோதிலும், அரசாங்கம் அதன் பலனை மக்களுக்கு வழங்க மறுக்கின்றது-என்றார். (க)


மாகாணமட்ட

# பளுதூக்கல் போட்டியில் யூனியன் கல்லூரி சாதனை!



மாகாண மட்டப் பளுதூக்கல் போட்டியில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் இருவர் சிறப்பான சாதனைகளைப் படைத்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். கு. நிதர்சனா 20 வயதுக்குட்பட்ட 81 கிலோ எடைப்பிரிவில் 70 கிலோ எடையைத் தூக்கி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். அத்துடன் சி. பிரசாத் 17 வயதுக்குட்பட்ட 49 கிலோ நிறைப்பிரிவில் 90 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். இருவரும் தங்களது சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தி தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகி, கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (க)

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை அம்மையப்பர்

(அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் எழுது வினைஞர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம், ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ வட்டு இந்து கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து கல்லூரி, பரந்தன் குமரபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் நீராவியடி பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வடக்கு வீடு, அராலி தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அம்மையப்பர் அவர்கள் கடந்த 20.06.2026 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் காரைக்காலம்மையார் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பர்வதவர்த்தினி ஆகியோரின் அன்பு மருமகனும், சிதம்பரவல்லியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னபூரணி, காலஞ்சென்ற சம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், மேரி, காலஞ்சென்ற மங்கையற்கரசி, காலஞ்சென்ற அரிச்சந்திரன், சங்கரப்பிள்ளை, அபிராமி, குமாரசாமி, சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரா, சிவகுமாரன், சித்திரா, கௌரி, காலஞ்சென்ற சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபால் சங்கரப்பிள்ளை, தயாபரி, சர்வானந்தன், தேவசேனாதிபதி ஆகியோரின் அன்பு மாமனாரும், விநோதன், வாணி -நீல், அரன், சிவகரன், சிவஜீவன் - ஜயனி, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும், ஆஷா, டிலான் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2026) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 10.30 மணியளவில் அராலி தெற்கு, பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பிறப்பு 18.01.1932 இறப்பு 20.06.2026

வடக்கு வீடு,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/61721) N-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.